
10/=
பக்கங்கள் 06
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 144 சனிக்கிழமை ஒக்ரோபர் 14 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## அமைச்சர் குழுவுடன் மாவை ரஷ்யா பயணம்



நீதி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல உள்ளிட்ட குழுவினருடன் தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ்பெர்க் நகரில் இடம்பெறும் 137ஆவது சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் பிரதான மாநாட்டில் பற்கேற்பதற்காகவே இக் குழுவனர் அங்கு சென்றுள்ளார்.

இதன்போது, சர்வதேச ரீதியில் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை பலப்படுத்துவது குறித்து

06

# யாழில் மைத்திரிக்கு கறுப்பு-எதிர்ப்பு



யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகே கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். இந்துக் கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறும் அகில இலங்கை தமிழ்மொழித் தின விழாவில் பங்கேற்றார்.

இதில் பங்கேற்பதற்காக, யாழ். வந்த ஜனாதிபதிக்கு எதிராக, அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இணைந்து இன்று காலை கறுப்புச் சட்டை அணிந்து, கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அரசியல் கைதிகளின் விவகாரத்துக்குத்

06

## வாக்குறுதிகளை விடுத்து செயலில் காட்டட்டும்



வீதியில் நின்று ஜனாதிபதிக்கு கைகுலுக்கி அவருடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டிய தேவை தமக்கு இல்லை எனத் தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி வாக்குறுதிகளை வழங்குவதை விட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதையே தாம் விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு முன்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இன்று போராட்டம் நடைபெற்றது. அதன்போது அங்கு வந்த ஜனாதிபதியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேச்சுவார்தையில் ஈடுபட்டனர். அதன்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்

06

## ஜனாதிபதி வாக்களித்தார் சிவாஜி நம்பிக்கை

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று ஜனாதிபதி இன்று வாக்களித்ததாக வடமாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் குறிப்பிட்ட அவர்,

காங்கேசன்துறை வீதியில் இந்துக் கல்லூரிக்கு முன்பாக அரசியல்கைதிகளின்விடுதலையை வலியுறுத்தி அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்பினர் இணைந்து இன்று போராட்டத்தில் ஈடுபட்டோம்.

போராட்டத்தின் போது, இந்துக் கல்லூரி நிகழ்வுக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்முடன் கலந்துரையாடினார். அந்த

06

## அரசாங்கத்தைக் கவிழ்க்க புதிய கூட்டணி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாவலப்பிட்டி கட்சி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட எம்.பி மஹிந்தானந்த அலுத்கமகே, தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எதிராக, புதியதொரு கூட்டணியை அமைக்கவுள்ளதாகவும் அதில், மக்கள் விடுதலை முன்னணியும் அங்கம் வகிக்கலாம்

06



## திருப்பியனுப்பப்பட்ட மாணவர்கள்

யாழில் நடைபெற்ற ஜனாதிபதியின் நிகழ்வில் கலந்து கொள்ள விடாது பல மாணவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இன்று அகில இலங்கைத் தமிழ் மொழி தினம் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. அந்நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொண்டு இருந்தார். குறித்த நிகழ்வு இன்றைய தினம்

06




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உத்தரவிட அமெரிக்காவுக்கு உரிமையில்லை



இலங்கைக்கு உத்தரவிடும் பாணியில் அமெரிக்கா கருத்துக்களை வெளியிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படை நடத்திய காலி கலந்துரையாடலில் பங்கேற்ற அமெரிக்க கடற்படையின் அதிரடிப் படை 73 மற்றும் மேற்கு பசுபிக் விநியோக குழுவின் தளபதி றியர் அட்மிரல் டொன் கப்ரியேல்சன், சீனாவுடன் உறவுகளை வைத்துள்ள நாடுகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், அதன் நோக்கங்களில் வெளிப்படைத் தன்மை கிடையாது என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில் அமெரிக்க கடற்படைத் தளபதியின் இந்தக் கருத்து குறித்து பதில் கருத்து வெளியிடும் போதே திஸ்ஸ விதாரண இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டுள்ள அவர், இலங்கைக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையிலான உறவு தொடர்பாக கருத்து வெளியிடுவதற்கு அமெரிக்காவுக்கு உரிமை இல்லை. தனி இறைமையுள்ள இலங்கைக்கு உத்தரவிடும் பாணியில் அமெரிக்கா கருத்துக்களை வெளியிடுவதற்கு இன்றைய அரசாங்கம் அனுமதித்துள்ளது.

அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரியான றியர் அட்மிரல் டொன் கப்ரியேல்சன் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து கண்டனத்துக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## போராட்டங்கள் நடத்தினாலும் கைதிகளை விடமுடியாது



போராட்டங்கள் நடத்தப்பட்டாலும் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த போராட்டங்கள் அரசியல் லாபங்களை கருத்திற் கொண்டே வடக்கில் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பியகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் போராட்டமொன்றை முன்னெடுத்து வருவதாகவும் இந்தப் போராட்டங்களினால் வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அரசியல் லாப நோக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புலிச் சந்தேக நபர்களை அரசியல் கைதிகள் என அடையாளப்படுத்தினாலும் அவர்கள் அரசியல் கைதிகள் அல்லர் எனவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள்ளார். (உ)

## இலங்கைத் தமிழர் ஒருவர் இந்தோனேசியாவில் கைது



போராட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தார் என்ற குற்றச்சாட்டில் இலங்கைப் புகலிட கோரிக்கையாளர் ஒருவரை இந்தோனேஷியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாதன் பார்தீபன் என்ற புகலிட கோரிக்கையாளரே இவ்வாறு நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார். போராட்டத்துக்கு தூண்டியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக கூறி படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட இலங்கை தமிழர்கள் பலர் இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 300க்கும் மேற்பட்ட ஈழ புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்தோனேஷியாவின் வட சுமத்திரா மாகாணத்தில், மெடானில் எனும் இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். குறித்த அனைவரும் அகதி அந்தஸ்து பெறுவதற்கு தகுதியானவர்கள் என்பதை ஐ.நா சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், குறித்த அனைவருக்கும் அகதி அந்தஸ்து வழங்கி வேறு நாடுகளுக்குச் செல்வதற்கு இந்தோனேஷிய அரசாங்கம் மறுப்பு வெளியிட்டு வருவதாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழ அகதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்நிலையில், தம்மை வேறு நாடுகளுக்கு அனுப்புமாறு கோரியே அகதிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (உ)

## மீனவர்கள் பேச்சு

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை குறித்து இன்று பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது உள்ளது. இந்தியாவின் புதுடெல்லியில் இலங்கை மற்றும் இந்தியப் பிரதிநிதிகளுக்கு இடையில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது.

அமைச்சு மட்டத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்காக மீன்பிடித்துறை நீரியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீர உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளனர். இந்தியாவின் சார்பில் விவசாய மற்றும் விவசாயிகள் நலன்புரி அமைச்சர் ராதா மோகன் சிங் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க உள்ளனர்.

ஆழ் கடல் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சட்டவிரோத ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளினால் இலங்கை மீனவர்களும் மீன்வளமும் பாதிக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (உ)

## வத்திக்கான் சென்ற குழுவினர் பாப்பரசருடன் சந்திப்பு

இலங்கையில் இருந்து வத்திக்கானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள குழுவை புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் சந்தித்துள்ளார். குறித்த சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

2015ஆம் ஆண்டு புனித பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்தக் குழுவே முன்னெடுத்திருந்தது. இதன்போது, நல்லிணக்கத்துக்காக மக்கள் ஏங்கிக்கொண்டிருந்ததைத் தான் அவதானித்ததாகவும் பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில், சகல மதத்தவர்களும் ஒற்றுமையாகவும், கலாசாரத்துடனும் செயற்படுவதை தான் உணர்ந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## ஹோமாகம பிரதேச வங்கியில் கொள்ளை

ஹோமாகம பிரதேச வங்கி ஒன்றில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஹோமாகம பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான பாதுக்க குருகல கிராம வங்கியிலேயே இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

முழுமையாக முகத்தை மூடி தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வங்கிக்குள் புகுந்து பெண் ஊழியர் ஒருவரிடம் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்திய நிலையில் வங்கியில் உள்ள பணம் மற்றும் நகைகளை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் போது பணம் வழங்கும் பிரிவில் இருந்த பெண் கை அருகில் இருந்த பணத்தை மாத்திரம் வழங்கிவிட்டு பெட்டியில் இருந்த பணத்தை தூரமாக வைத்துள்ளார். இதனால் கிட்டத்தட்ட 2 லட்சம் ரூபா பணம் கொள்ளைக்காரர்களிடம் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளது. எனினும் பொலிஸார் அவ்விடத்திற்கு வருவதற்கு முன்னர் 50000 ரூபாய் பணத்துடன் சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

கண்காணிப்புக் கமெராவின் உதவியுடன் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர். (உ)

# முற்கூட்டிய சம்பளம் தீபாவளிக்கு இல்லை

அரச தமிழ் ஊழியர்களுக்கான இம்மாத சம்பளம் முற்கூட்டியே வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு பாடசாலை ஆசிரியர்கள், அரசாங்கத்தில் பணியாற்றும் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் இம்மாத சம்பளத்தை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு, நுவரெலியா மாவட்ட மலையக ஆசிரியர்கள் மற்றும் தமிழ் அரச பணியாளர்கள் ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

வழமையாக ஆசிரியர்களுக்கு 20ஆம் திகதியும், ஏனைய அரச ஊழியர்களுக்கு 25ஆம் திகதியும் சம்பளம் கணக்கில் இடப்படுவது வழமையாகும். இம்மாதம் 18ஆம் திகதி தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்பட இருப்பதால், சம்பளத்தை முற்கூட்டி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள்பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"எமது நாட்டில் அரச ஊழியர்களுக்கு மத ரீதியான பண்டிகைகளுக்கு முன்கூட்டியே சம்பளப் பணம் வழங்கப்படுவதில்லை. தேசிய பண்டிகையான தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு மாத்திரமே சம்பள பணம் முற்கூட்டியே வழங்கப்படும்.

எனவே, ஆசிரியர்களுக்கும் ஏனைய அரச ஊழியர்களுக்கும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட திகதியிலேயே சம்பளம் வழங்கப்படும்" என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ)

## வீட்டுக்குள் புகுந்து சிறுமிகள் கடத்தல்

அம்பலங்கொட, ரன்தோபே பிரதேசத்தில் வீடொன்றுக்குள் புகுந்தவர்கள் அங்கிருந்தவர்களை, கூர்மையான ஆயுதத்தில் தாக்கி விட்டு 3 பிள்ளைகளைக் கடத்தி சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த வீட்டில் இருந்த இளம் பெண்ணின் கணவர் மேலும் சிலருடன் வந்து வீட்டில் இருந்தவர்களை தாக்கி விட்டு பிள்ளைகளை கடத்தி சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. 11, 5 மற்றும் 7 வயதுடைய 3 பெண் பிள்ளைகளே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். தாக்குதலினால் படுகாயமடைந்த யுவதிகள் இருவர் சிகிச்சைக்காக பலபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.


குடும்பச் பிரச்சினை காரணமாக பிள்ளைகளின் தாயார் தனது கணவரை பிரிந்து குறித்த வீட்டில் வாழ்ந்து வருகின்றார்.

கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் கணவரை பிரிவதற்கு அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 13 வயதுடைய மூத்த பிள்ளை கணவனின் பொறுப்பிலேயே வாழ்ந்து வருகிறார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டெங்குவைக் கட்டுப்படுத்த 240 கோடி ரூபா தேவை

தமிழகத்தில் வேகமாகப் பரவிவரும் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த இந்திய மத்திய அரசிடமிருந்து 240 கோடி ரூபாவைக் கோரியிருப்பதாக மாநில சுகாதாரத் துறை அமைச்சர் விஜய பாஸ்கர் தெரிவித்திருக்கிறார்.
தமிழகத்தில் சுமார் 12 ஆயிரம் பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், நிலவரத்தை ஆராய மத்திய அரசைச் சேர்ந்த மருத்துவர் குழுவினர் நேற்றுச் சென்னை வந்து ஆய்வு நடத்தினர்.
டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் ஆசுதோஷ் பிஸ்வாஸ் தலைமையில் ஐந்து மருத்துவர் கொண்ட குழு சென்னையில் பொது சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியது.
இந்தக் கூட்டத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய விஜயபாஸ்கர், டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தவும் காய்ச்சலைக் கட்டுப்படுத்தவும் மத்திய அரசிடம் 256 கோடி ரூபா கேட்டிருப்பதாகத் தெரிவித்தார்.
செய்தியாளர்களிடம் பேசிய ஆசுதோஷ் பிஸ்வாஸ், "தமிழகம், கேரளா ஆகிய மாநிலங்களில் டெங்கு பரவியிருப்பதற்குக் காரணம், தண்ணீர் தேங்குவதுதான். நோயின் பரவலுக்கு மாநில அரசைக் குற்றம்சாட்ட முடியாது" என்றும் தெரிவித்தார்.
தமிழ்நாட்டில் டெங்கு நோயால் இதுவரை சுமார் 40 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)





# குறுஞ்செய்தி உயிலானது!

## ஆஸ்திரேலியாவில் விநோதத் தீர்ப்பு

ஆஸ்திரேலியாவில் இறந்தவரின் கைபேசிக் குறுஞ்செய்தியை உயிலாக ஏற்றுக்கொண்டு பிரிஸ்பேன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தை சேர்ந்த 55 வயதான நபரொருவர் கடந்த ஆண்டு தற்கொலை செய்துகொண்டார்.
இவர் தனது கைபேசியில், தனது சகோதரருக்கும், சகோதரரின் மகனுக்குமே தனது சொத்துகள் அனைத்தும் சேரும் என்று ஒரு குறுஞ்செய்தியைத் தட்டச்சுச் செய்து, அதில் அவரின் சகோதரரின் கைபேசி எண்ணையே பெறுநருக்கான இடத்திலும்நிரப்பியுள்ளார்.
எனினும் அந்தக் குறுஞ்செய்தியை அனுப்பாமல் சேமித்து வைத்திருந்துள்ளார். மேலும் "என்னை எரித்த சாம்பலை தோட்டத்தின் பின்புறத்தில் வீசவும்" எனக் குறிப்பிட்டு, "இது எனது உயில் "என முடித்துள்ளார்.
இந்த நிலையில் இவரது மனைவி, "எனதுகணவரின் சொத்துக்கள் அனைத்தும் எனக்குத் தான் சொந்தம்"என உரிமை கோரி வழக்குத் தொடர்ந்திருந்தார்.
ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தில் ஒரு உயில் செல்லுபடியாக வேண்டுமானால், அது எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும் என்பதுடன் அதற்கு இரண்டு சாட்சியாளர்கள் கையெழுத்து இட வேண்டும்.
எனவே, இறந்த நபரின் குறுஞ்செய்தியை உயிலாக நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, இறந்துபோன நபரின் சகோதரருக்கு சொத்துக்களை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.(இ)

# அகதிகளை அனுப்ப வேண்டாம்!



மியான்மர் அடக்குமுறையிலிருந்து தப்பி, இந்தியா வந்துள்ள ரோஹிங்கிய முஸ்லிம்களை தற்போது திருப்பி அனுப்ப வேண்டாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கு வாய்மொழியாக அறிவுறுத்தியுள்ளது.
'இது குறித்து உத்தரவாக எதையும் பதிவு செய்ய வேண்டாம். ஏனெனில் அது விரும்பத் தகாத சர்வதேச விளைவுகளை ஏற்படுத்தும் ' என்று இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க வாய்மொழியாக இதனை அறிவுறுத்தியுள்ளது உச்ச நீதிமன்றம்.
மேலும் ரோஹிங்கியர்கள் இது குறித்து அவசரத் தேவை ஏற்பட்டால் தங்களை அணுகலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, "எங்கு தவறு நடைபெறுகிறது என்று கருதப்படுகிறதோ நடவடிக்கை எடுங்கள், ஆனால் இப்போது அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம்" என்று கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவிடம் வாய்மொழியாகக் கூறினார்.
ரோஹிங்கியர்களுக்காக ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஃபாலி நாரிமன், "ஏதேனும் கஷ்டமேற்பட்டால் நாங்கள் இங்கு வருகிறோம்" என்றார்.
உச்ச நீதிமன்றம் இது குறித்து எந்த உத்தரவையும் குறிப்பிட துஷார் மேத்தா கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்தார், 'வழக்கு விசாரணையில் இருப்பதால்' என்று கூட உச்ச நீதிமன்றம் குறிப்பிட துஷார் மேத்தா எதிர்ப்புத் தெரிவித்தார்.
இது அசாதாரணமான ஒரு சூழ்நிலை, மிகப்பெரிய விவகாரம், இதில் அரசுக்கு முக்கிய பங்கு உள்ளது என்பதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. தீபக் மிஸ்ரா, இந்திய அரசியல் சாசனம் குழந்தைகள், பெண்கள், உடல்நலம் குன்றியவர்கள், அப்பாவிகள் ஆகியோரைப் பாதுகாக்கிறது என்று கூறினார்.(இ)

# பெண்கள் கழிவறையில் நுழைந்த ராகுல் காந்தி



குஜராத்திய மொழி தெரியாததால், பெண்களின் கழிவறைக்குள் ராகுல் காந்தி நுழைந்த சம்பவம் அரசியல் வட்டாடங்களில் கேலிப் பொருளாகியுள்ளது.
விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதால் குஜராத் மாநிலத்தில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.
அப்போது, சோட்டா உதய்பூரில் பிரசாரத்துக்காக சென்ற ராகுல் அங்குள்ள கழிவறைக்குச் சென்றார். அப்போது 'பெண்கள் கழிவறை' என குஜராத்தி மொழியில் எழுதப்பட்டிருந்ததை கவனிக்காமல் அந்தப் பக்கம் ராகுல் சென்றுள்ளார். இதைப் பார்த்த உள்ளூர்வாசிகள் அவரிடம் தகவலைத் தெரிவித்தனர். உடனடியாக ராகுல், வேகமாக அங்கிருந்து வெளியேறினார்.
இது தொடர்பான வீடியோக் காட்சிகள் சமூக வலைத் தளங்களில் வேகமாகப் பரவி வருகின்றன.
ராகுலுக்கோ அவரதுபாதுகாவலர்களுக்கோ குஜராத்தி மொழி தெரியாததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. ஆனால் இது பாஜகவின் சதி என்று காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டி உள்ளது.(இ)

# பசியால் மடியும் பென்குயின்கள்

கிழக்கு அந்தாட்டிக்காவில் உள்ள அடேலி வகை பென்குயின்கள் வசிக்கும் ஒரு குடியிருப்பில், இனப்பெருக்க காலத்தில் பிறந்த இரண்டு குஞ்சுகளைத் தவிர மற்றைய அனைத்துப் பென்குயின் குஞ்சுகளும் உணவின்றிப் பட்டினியால் இருந்துள்ளதை 'பேரழிவு' என்று வல்லுநர்கள் கூறியுள்ளனர். அந்தாட்டிகாவை ஒட்டியுள்ள கடல் பகுதிகளில் அளவுக்கும் அதிகமான பனி சூழ்ந்துள்ளதால், பென்குயின்கள் தங்கள் குஞ்சுகளுக்கு உணவு தேடமிகவும் நீண்ட தூரம் கடலுக்குள்செல்ல வேண்டியுள்ளது.
அதனால், உணவு கிடைக்கத் தாமதமாகியதால், பசியாலேயே அந்த இளம் குஞ்சுகள் இறந்துள்ளன.
இதே போல கடந்த 2015ஆம் ஆண்டின் இனபெருக்க காலத்தில் பிறந்த அடேலி பென்குயின் குஞ்சுகளில் ஒன்று கூட பிழைக்காமல் அனைத்தும் உயிரிழந்தன. சுமார் 36,000 பென்குயின்கள் வசிக்கும் அந்தப் பென்குயின் குடியிருப்பில் கடல்சார் உயிரினங்களின் பாதுகாப்பு பகுதி ஒன்றை அவசரமாக உருவாக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.
அந்தப் பகுதிகளில் இறால் வகை மீன்கள் பிடிக்கப்படுவது தடை செய்யப்பட்டால், அங்கு பென்குயின்களுக்கு உணவுக்கான போட்டி குறைந்து அவை உணவு தேடி நீண்ட தூரம் செல்வது குறையும் என்றும் அதனால் அடேலி வகைப் பென்குயின்கள் உள்பட அனைத்துக் கடல்வாழ் உயிரினங்களும் பாதுகாக்கப்படும் என்று சுற்றுச்சூழல் அமைப்புகள் கூறியுள்ளன. (இ)

# சாம்சங் தலைமை அதிகாரி துறந்தார் பதவியை!



சாம்சங் எலக்ட்ரோனிக்ஸ் நிறுவனத் தலைமை நிர்வாக அதிகாரி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
ஒகஸ்ட் மாதம் முழு சாம்சங் குழுமத்துக்குமான வாரிசு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், அந்த நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய திடீர் நிர்வாக மாற்றம் இதுவாகும்.
சாம்சங் எலக்ட்ரோனிக்ஸின் மூன்று இணைத் தலைமை நிர்வாக அதிகாரிகளில் க்வான் ஓ ஹ்யூன் ஒருவர்.
நினைவகச் சில்லுகளின் அதிக விலை காரணமாக, இந்த நிறுவனம் காலாண்டில் அதிக லாப எதிர்பார்ப்பை செய்துள்ள அதே நாள் அவருடைய ராஜினாமாவும் வந்துள்ளது.
தன்னுடைய பதவியில் இருந்து விலகுவது பற்றி நீண்ட நாட்களாக சிந்தித்து வந்ததாகவும், இதற்கு மேலும் அதனை தள்ளிப் போட முடியாது என்றும் இந்த நிறுவனத்தின் நிர்வாக குழுவில் இருக்கும் க்வான் தெரிவித்திருக்கிறார்.
"முன்னெப்போதும் ஏற்படாத நெருக்கடியை நாம் எதிர்கொண்டுள்ளோம். இந்த நிறுவனம் புதிய தொடக்கம் காண வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று நம்புகிறேன். தகவல் தொடர்பு தொழில்துறை மிக விரைவாக மாறி வருவதால் புதிய சவால்களுக்கு சிறந்த முறையில் பதிலளிப்பதற்கு இளம் தலைமை அவசியம்" என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை சாம்சங் எலக்ட்ரோனிக்ஸின் நிர்வாகக் குழுவில் க்வான் ஓ ஹ்யூன் இருப்பார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையை வீழ்த்தியது பாகிஸ்தான்

டுபாயில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணியை 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

இலங்கைக் கிரிக்கெட் அணி, பாகிஸ்தானுடன் இரண்டு டெஸ்ட்கள், ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 இருபது-20 போட்டிகளில் டுபாயில் விளையாடிவருகிறது.

முதலில் நடந்து முடிந்த டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2:0 என கைப்பற்றி அசத்தியது.

இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி, டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 292 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணியின் மாலிக் (81), அஸாம் (103) ஆகியோர் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

பின்னர் வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, 50 ஓவர்கள் நிறையில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 209 ஓட்டங்களையே சேர்த்தது. இதனால், 83 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் திரிமன்னே (53), தனஞ்சய (50) ஆகியோர் மாத்திரமே சிறப்பாக ஆடி அரைச்சதம் பூர்த்தி செய்தனர்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் மாலிக் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. (ஐ)

# தமிழ் கற்க ஆசை



தெலுங்கில் வெற்றி பெற்ற ‘அர்ஜூன் ரெட்டி’ படத்தில் நடித்ததன் மூலம் தமிழுக்கு வந்திருப்பவர் ஷாலினி பாண்டே. இவர், ‘100 பிரசன்ட் காதல்’ என்ற தமிழ் படத்தில் ஜி.வி.பிரகாஷ் ஜோடியாகியிருக்கிறார்.


இந்தப் படம் குறித்து நாயகி ஷாலினி பாண்டே குறித்துக் கூறுகையில்,

“விளையாட்டில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. எனவே, அதில் சாதனை படைக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசையாக இருந்தது. ஆனால் எனது தோழிகள், ‘நீ அழகாக இருக்கிறாய் கலைத்துறைக்கு ஏன் போகக் கூடாது என்றார்கள். எனவே, நடிப்பில் கவனம் செலுத்தினேன். பின்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றேன். இணையத் தளத்தில் வெளியான எனது படத்தைப் பார்த்து சந்தீப்ரெட்டி எனக்கு தெலுங்குப்பட வாய்ப்பைக் கொடுத்தார்.

“அந்தப் படம் என்னை இங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. இப்போதுதான் தமிழ்ப் படங்கள் பார்க்க, பாடல்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறேன். தமிழ் கற்றுக்கொள்ள மிகவும் ஆர்வமாக இருக்கிறேன்” என்றார். (ஒ)

# ஷங்காய்: அரையிறுதிச் சமர்









ஷங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால், சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளிட்டோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவின் ஷங்காய் நகரில் இந்தப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற காலிறுதியில், போட்டித் தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கும் பெடரர் 7-5, 6-4 என்ற சுற்றுக் கணக்கில் பிரான்ஸின் ரிச்சர்ட் காஸ்கட்டைத் தோற்கடித்தார்.

ஆர்ஜென்டீனாவின் ஜுவன் மார்ட்டின், தனது காலிறுதியில் 4-6, 6-1, 6-4 என்ற புள்ளிக் கணக்கில் செர்பியாவின் விக்டர் டிராய்க்கியைத் தோற்கடித்தார். இவர் தனது அரையிறுதியில் பெடரரைச் சந்திக்கிறார்.

மற்றொரு காலிறுதியில், போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் நடால் 6-4, 6-7, 6-3 என்ற சுற்றுக் கணக்கில் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவைத் தோற்கடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில் குரோஷியாவின் மரின் சிலிச், 6-3, 6-4 என்ற சுற்றுக் கணக்கில் ஸ்பெயினின் அல்பேர்ட் ரேமோஸைத் தோற்கடித்தார்.

இவர் தனது அரையிறுதியில் நடாலை எதிர்கொள்ளவுள்ளார். நடாலும், சிலிச்சும் இதுவரை 5 தடவைகள் நேருக்கு நேர் மோதியுள்ளனர். அதில் நடால் 4 தடவைகளும், சிலிச் ஒரு முறையும் வெற்றி பெற்றுள்ளனர். (ஐ)

# இது விஜய் அண்ணாவின் தீபாவளி



கேளிக்கை வரி குறித்த பிரச்சினையால் இரண்டு வாரமாக எந்தப் படமும் வெளியாகவில்லை.

ஒக்டோபர் 7 வெளியாவதாக அறிவித்த கிருஷ்ணா நடித்த ‘விழித்திரு’ மற்றும் ‘சோலோ’ ஆகிய படங்கள் தள்ளிப்போயிருந்தன.

இந்நிலையில், மெர்சல் படம் தீபாவளிக்கு வெளியாகவுள்ளது.

திரைப்படச் சங்கம் எடுத்த முடிவால் தடைபட்ட படங்களை தீபாவளியில் வெளியிட்டிருக்கலாம் என ஒருவர் ருவிட்டரில் கூறியதற்குப் பதிலளித்த நடிகர் கிருஷ்ணா, தனது படம் தீபாவளிக்கு வெளியாகாது எனக்கூறியுள்ளார்.

அதில் அவர், “விஜய் அண்ணாவின் தீபாவளி என்பதால் இதைச் செய்துதான் ஆகவேண்டும்” என ருவிட் செய்துள்ளார். (ஒ)

# மகேஷ்பாபுவை இயக்கும் ராஜமௌலி





‘பாகுபலி’ படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தனது அடுத்த படங்கள் குறித்த தகவலை வெளியிட்டுள்ளார் இயக்குநர் ராஜமௌலி.

‘பாகுபலி’ மற்றும் ‘பாகுபலி 2’ ஆகிய படங்களைத் தொடர்ந்து, ஓய்விலிருந்து வருகிறார் இயக்குநர் ராஜமௌலி. அவருடைய அடுத்த படங்கள் குறித்து பல்வேறு தகவல்கள் வெளியான வண்ணம் உள்ளது.

இந்நிலையில், முதன்முறையாக தனது அடுத்த படங்கள் குறித்துப் பேசியுள்ளார் ராஜமௌலி. அதில், முதலில் சமூக அக்கறையுடன் கூறிய படமொன்றை இயக்கவிருக்கிறார். இந்தப் படத்தை டி.வி.வி.தனய்யா தயாரிக்கவுள்ளார். இது தெலுங்கில் தயாராகிறதா? அல்லது வேறு மொழிகளில் தயாராகிறதா? என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. மேலும் யார் நடிக்கிறார்கள் என்பதும் முடிவாகவில்லை.

இதனைத் தொடர்ந்து 2019இல் மகேஷ்பாபு நடிக்கவுள்ள படத்தை இயக்கவிருக்கிறார். இதனை கே.எல்.நாராயணா தயாரிக்கவுள்ளார்.

ராஜமௌலி தனது இரண்டாவது படத்தின் நாயகன் மகேஷ்பாபு என அறிவித்ததையடுத்து, அந்தக் கூட்டணியின் படத்துக்காக தெலுங்கு ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுனெஸ்கோவிலிருந்து விலக அமெரிக்கா, இஸ்ரேல் முடிவு

ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவில் இருந்து அமெரிக்கா விலகவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. யுனெஸ்கோ, இஸ்ரேலுக்கு எதிராக செயற்படுவதாக தெரிவித்தே இவ்வாறு விலக தீர்மானித்துள்ளது. அடுத்த வருடம் ( 2018) டிசம்பர் இறுதியில் யுனெஸ்கோவில் இருந்து அமெரிக்கா விலகிக் கொள்ளும் எனவும், அதுவரை அமெரிக்கா முழு உறுப்பினராக இருக்கும் என்றும் அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த முடிவு மறுபரிசீலனை செய்யப்படலாம் என்றும் கூறியுள்ளது. யுனெஸ்கோவில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவித்ததையடுத்து இஸ்ரேலும் விலகப் போவதாக அறிவித்துள்ளது. எனினும் அமெரிக்காவின் இந்த முடிவு குறித்து யுனெஸ்கோ கவலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அமெரிக்க நிறுவனம் இலங்கைக்கு உதவி

அமெரிக்காவின் மிலேனியம் செலெஞ்ஜர் கோப்பரேஷன் நிறுவனம் இலங்கைக்கான பொருளாதாரத் தொடர்பில் தயாரித்துள்ள ஐந்து வருட திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மீளாய்வை மேற் கொண்டுள்ளது.
நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் வேண்டுகோளின் பேரில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்த நிறுவனத்தின் ஆசிய பிராந்திய தலைவர் பெட்டேமா சுமாரி அம்மையாருடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் போதே இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.
இந்த நிறுவனம் இலங்கைக்கு ஐந்து வருட காலத்திற்கென 70 கோடி டொலர் நிதியை வழங்க முன்வந்துள்ளது.
இதில் காணி மற்றும் போக்குவரத்திற்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது.
உலக நாடுகள் பலவற்றில் இந்த நிறுவனம் வறுமையை ஒழிப்பதற்காக திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இன்றைய கருத்தோவியம்




# தேயிலை கலப்படம் இருவர் கைது



நீண்ட காலமாக சட்டவிரோதமாக கழிவு தேயிலை தூளுடன் நல்ல தேயிலை துளை கலப்படம் செய்து வியாபார நடவடிக்கையில் ஈடுப்பட்டு வந்த இருவரை ஹட்டன் வில்பிரட் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. ஹட்டன் வில்பிரட்புர பகுதியில் வீடு ஒன்றில் கழிவு தேயிலையுடன், நல்ல தேயிலை தூளை கலப்படம் செய்து கொண்டிருக்கும் போது ஹட்டன் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு இவர்களை கைது செய்துள்ளனர். குறித்த இடத்தில் நீண்டகாலமாக கழிவு தேயிலை தூளுடன் நல்ல தேயிலைகளை கலப்படம் செய்து வியாபார நடவடிக்கையில் ஈடுப்பட்டு வந்துள்ளமை பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. அதேவேளை இந்த இடத்திலிருந்து 297 கிலோ கழிவு தேயிலை தூளுடன் தேயிலை தூளை தரம்பிரிப்பதற்கு பயன்படுத்திய சல்லடை வகைகள், பொதி செய்யும் பொதிகள், அறைப்பதற்கு பயன்படுத்திய இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இந்த கலப்பட நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ள உரிமையாளரையும் ஹட்டன்பொலிஸார்கைது செய்துள்ளனர் (உ)

## மேக மூட்டத்துடன் மழை தொடரும்

நாட்டில் மேக மூட்டம் மற்றும் மழை தொடரக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேற்கு, சப்ரகமுவ, வடமேல், வடக்கு, காலி, மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் 100 தொடக்கம் 150 மில்லிமீற்றர் மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை தமிழகத்தில் 3 நாட்கள் இடியுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு இயல்பைவிட அதிகம் பெய்யும் என்று வானிலை நிலையம் குறிப்பிட்டுள்ளது. (உ)

## வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை

மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் ரிஷாத் பதியுத்தீன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இந்த வாரம் கூடிய வாழ்க்கைச் செலவினக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.
எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் 500 அத்தியாவசியப்பொருட்களுக்கான விலைகளைக் குறைத்து எனது அமைச்சின் கீழான லங்கா சதொசவில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நவம்பர் 15 ஆம் திகதி முதல் டிசெம்பர் 31 வரை விலைக் கழிவு அமுலில் இருக்கும். ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும், ரயில்வே நிலையங்களிலும், அரச நிறுவனங்களிலும் முடியுமான வரை சதொச விற்பனைக் கிளைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவுடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளோம் . அத்துடன் தனியார் முகவர்களுடனும் சதொச கிளைகளை ஆரம்பிப்பது குறித்து கலந்தாலோசித்துள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (உ)

## ட்ரம்பின் வர்த்தகச் செயலருடன் மங்கள சமரவீர பேச்சு



அமெரிக்க ஜனாதிபதி டோனால்ட் ட்ரம்மின் நிருவாகத்தின் வர்த்தக துறை சிரேஷ்ட செயலர் வில்பர் ரோசுக்கும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் இடையில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. தற்போது உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தினது வருடாந்த கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள போது இந்த சந்திப்பு இருவருக்குமிடையில் இடம்பெற்றது.
இச்சந்திப்பின்போது இரு நாட்டு உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கப்பம் கோரிய நபர் கைது



கப்பம் பெற முயற்சித்த நபர் ஒருவர் கொட்டாவ, மாகும்புர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர், மாகும்புர பிரதேசத்தில் தொலைபேசி மூலம் மிரட்டி நபர் ஒருவரிடம் கப்பம் பெற முயற்சித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.
பன்னிப்பிட்டிய, பொரள்ளை வீதி பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இது தவிர குருணாகல் பிரதேசத்தில் நபர் ஒருவரை கடத்திச் சென்று 3 இலட்சத்து 80,000 ரூபா கப்பம் பெற முயற்சித்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொல்பிட்டிகம பிரதேசத்தில் வசிக்கும் 27 மற்றும் 28 வயதுடைய இரண்டு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)



தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கமக்காரர் வாரத்தை முன்னிட்டு அக்கராயன்குளம் கமநல சேவைத் திணைக்களத்தினால் நெல் விதைப்பு உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டது. (உ-11)

## நாளை நாளும் கோளும்

15.10.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 29 ஆம் நாள
ஏதாதசி பி.இ. 02.41 வரை ஆயிலியம் மு.ப. 9 மணி வரை சித்தயோகம் ஏகாதசிவிரதம் கரிநாள்
இராகுகாலம் 04.32 - 06.02 சுபநேரம் 09.02 - 10.32 எமகண்டம் 12.02 - 01.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோய் | வெற்றி | கவனம் | காரியசித்தி | புகழ் | ஜெயம் | சாந்தம் | பாராட்டு | ஈகை | பாசம் | ஒய்வு | பெருமை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli



## அந்த நாள் ஞாபகம்.....!



**1948.10.14**

இலங்கையின் முதலாவது நாடாளுமன்றம் கூடியது.





# இலங்கை தளபதிகளுடன் அமெரிக்கா அதிகாரி பேச்சு

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் தெற்கிழக்காசிய பிராந்தியத்துக்கான பிரதி உதவிச் செயலர், கேணல் ஜோசப் பெல்டர், சிறிலங்காவின் பாதுகாப்பு உயர்மட்டத்தினருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். நேற்றுக்காலை இராணுவத் தலைமையகத்துக்குச் சென்ற கேணல் ஜோசப் பெல்டர், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இருதரப்பு. பல தரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்தும், தற்போதைய பாதுகாப்பு முன்னேற்றங்கள் மற்றும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதேவேளை, கடற்படைத் தலைமையகத்தில் நேற்றுக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவையும், கேணல் பெல்டர் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது, கடல்சார் பாதுகாப்பு, இருநாட்டு கடற்படைகளுக்கும் இடையில் உறவுகளை வலுப்படுத்தல், தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. பாடசாலை மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் பொதுக் கூட்டத்தில் யாப்புச் சமர்ப்பித்தலும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும்.

**அமைச்சர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியமைச்சர் தலதா அத்துகொரலட உரையாற்றவுள்ளார். அத்துடன், பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பான தீர்மானம் ஒன்றும் அங்கு நிறைவேற்றப்பட உள்ளதாக நீதி அமைச்சரின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. ரஷ்யா சென்றுள்ள இக் குழுவில் சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர். (உ)

**ஜனாதிபதி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலின் போது, அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும், வவுனியா நீதிமன்றில் வழக்குகளை நடத்துமாறு உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் வழக்குகளை வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டாமென்றும் கோரிக்கை முன்வைத்தோம். எங்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி தான் உரிய நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்தார் - என்றார். (எ)

**வாக்குறுதி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜனாதிபதியுடன்னா கலலந்துரையாடலிலிருந்து விலகினின்றார். அதனை அவதானித்த ஜனாதிபதி செயலக அதிகாரிகள் அவரை அழைத்தபோது அவர் மறுத்திருந்தார். இது தொடர்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது குறிப்பிட்ட அவர், அரசியல் கைதிகளின் பிரச்சினை தொடர்பான போராட்டம் நடைபெறுகின்றது என ஜனாதிக்குத் தெரியும். அவர் அதற்கு தீர்வு காண முற்படாது வீதியில் இறங்கி வெறும் வாக்குறுதிகளை வழங்குவதை நாம் விரும்பவில்லை. இதுவே பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் நிலைப்பாடாகவும் இருக்கிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேசத்துக்கும் சிங்கள மக்களுக்கும் நல்லவர் போல தன்னைக் காட்டிக் கொள்ள முற்படுகின்றார் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)

**திருப்பியனுப்பப்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னதாக செய்யப்பட்டு இருந்தன. இன்றையதினம் காலை மழை பெய்தமையால் , நிகழ்வு கல்லூரி கேட்போர் கூடத்துக்கு மாற்றப்பட்டது. அதன் காரணமாக மண்டபத்தில் இட நெருக்கடி ஏற்பட்டதனை அடுத்து நிகழ்வில் கலந்து கொள்ள வந்த மாணவர்கள் ஆசிரியர்கள் என பலரும் திருப்பி அனுப்பப்பட்டனர். (எ)













தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை இடம்மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியின் யாழ். வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக் கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**யாழில் மைத்திரிக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு காணத் தவறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வெளியேறக் கோரிஆர்ப்பாட்டக்காரர்கள் முழக்கமிட்டனர்.

இதன்போது காங்கேசன்துறை வீதியில் போராட்டம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த பகுதியைக் கடந்து, யாழ். இந்துக் கல்லூரி வீதிக்கு வாகன அணியாகத் திரும்பிய மைத்திரி தனது வாகனத்தை விட்டு இறங்கி, ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களைச் சந்தித்தார். அப்போது அரசியல்கைதிகளை விடுவிக்குமாறும், அனுராதபுரத்துக்கு மாற்றப்பட்ட வழக்குகளை வவுனியாவுக்கு மாற்றுமாறும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து தாம் கவனத்தில் கொள்வதாக ஜனாதிபதி கூறிய போதிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள், அவருக்கு எதிராக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டங்களில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்டோரும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ-01)

**அரசாங்கத்தைக்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் கூறியுள்ளார். புதிதாக உருவாக்கப்படவுள்ள இந்தக் கூட்டணியின் மூலம், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு, தற்போதுள்ள நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்ப்பதையே நோக்கமாகக் கொள்ளப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

“புதியக் கூட்டணிக்கு என்ன பெயர் மற்றும் என்ன சின்னம் என்பது தொடர்பாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால், எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடப் போவது உறுதி. ஒன்றிணைந்த எதிரணியின் ஆதாரவுடன், இந்தக் கூட்டணி அமைக்கப்படும். மேலும், எமது கூட்டணியில் இணைந்துக்கொள்வதற்கு, ஜே.வி.பிக்கும் அழைப்பு விடுக்கப்படும்” என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 14.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.